# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ**

************

**முறையீட்டு மனு எண்: 196/2017/பே–2**
**ஆணை.எண். 124 /2018/நாள். 18–05–2018**

திரு. உ. உதயகுமார்,
முள்ளிப்பள்ளம்,
புவனகிரி,
கடலூர் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

**ஆணை**

கடலூர் மாவட்டம், புவனகிரிபேரூராட்சி 3வது வார்டைச் சேர்ந்த திரு. உ. உதயகுமார், என்பவரின் 09.10.2015ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2015 அன்று பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டதில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015 ன்படி உரிய படிவத்திலும் புகாருக்கான ஆதார ஆவண நகல்களுடன் இல்லாதை சுட்டிக்காட்டியும், ரூ 10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணம் ஒட்டப்படாததை சுட்டிக் காட்டியும் இம்முறைமன்ற நடுவ ஆை எண் 230/2017/நாள் 14.09.2017ன்படி மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேலும் மேற்படி முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் குறித்து கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 06.11.2015 நாளிட்ட விளக்க அறிக்கையின் நகலுடன் முறையீட்டு மனுதாருக்கு அனுப்பிவைக்கப்பட்டு முறையீட்டு மனுவினை விதிகளின்படி உரிய படிவத்தில் ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மீதான ஆட்சேபணை/விளக்கம் ஏதுமிருப்பின் அதனையும் குறிப்பிட்டு மனுவினை

விதிகளின்படி சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவ ஆணை எண். 230/2017 நாள் 14.09.2017ன் மூலம் ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி முறையீட்டு மனுதாரர் திரு உ.உதயகுமார் தனது 05.10.2017ம் நாளிட்ட முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கைக்கான விளக்க அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்தில் 09.10.2017ல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி புகார் மனு முறையீட்டு மனு எண் 196/2017 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு உ. உதயகுமார், தனது புகார் மனுவில் கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் மீதான தனது விளக்கங்களை கீழ்கண்டவாறு புகார்களாக தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

1. புவனகிரி பேரூராட்சியில் ஏற்கனவே இருந்த கழிவு நீர் கால்வாய் நல்ல முறையில் இருந்ததாகவும், அதனை தவறான தொழில் நுட்ப அனுமதி மூலம் கழிவு நீர் எந்த திசையில் செல்லும் என்ற விவரம் தெரியாமல் அமைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.
2. பேருந்து நிலையத்திற்கு ரூ 5.00 லட்சம் மதிப்பீட்டில் டெண்டர் விடப்பட்டுள்ளதாகவும் மேற்படி தொகையில் பழுதுகள் நீக்கப்படாமல் ரூ.2.00 லட்சத்திற்குள்ளாகவே பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை திரு ப.குமரவேல் என்பவர் எடுத்து திரு தங்க.மகாலிங்கம் என்பவரிடம் விற்பனை செய்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.
3. தாமரைக்குளத்தின் கிழக்கு கரையில் பேரூராட்சிமன்றத் தலைவர் திருமதி வள்ளியும் மேற்கு கரையில் 6வது வார்டு உறுப்பினர் திரு கதிர்வேல் என்பவரும் குடியிருந்து வருவதால், மேற்படி குளத்தில் எந்த கால கட்டத்தலும் தண்ணீர் நிறைந்துள்ளதால் தூர் வார முடியாமலும், படித்துறையும் கட்ட இயலாது என தெரிந்தே டெண்டர் விட்டு தவறு செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.
4. மீனவர் சந்தில் நல்ல நிலையில் இருந்த சிமெண்ட் சாலையினை கடந்த சில ஆண்டுகளுக்கு முன் போடப்பட்டதை தற்போது போட்டு தொகையினை விரயம் செய்துள்ளனர்.
5. 18 வது வார்டில் ஆடு அடிக்கும் கூடம் விதிப்படி கட்டுமானப் பணிகள் செய்யவில்லை எனவும், அதற்கான சுற்றுச் சூழல் சான்று பெறப்படவில்லை. மேற்படி கட்டிடத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் திறந்தார் என்ற பொய்யான தகவலை தெரிவித்துள்ளதும், தற்போது மேற்படி கட்டிடத்தில் அங்கன்வாடி செயல்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.
6. பழைய பேரூராட்சி அலுவலகம் அருகில் மேலாக மும்முனை (Three Phase) மின் பாதை செல்லும் இடத்தின் கீழ் கட்டிடம் கட்டியது தவறு என்றும் பல ஆயிரம் கோடி ரூபாய் பேரூராட்சி நிதியிலிருந்து மேற்படி மின் பாதையினை மாற்றித் தர செலவழிப்பதால் பேரூராட்சி நிதி விரையம் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார்.
7. 18வது வார்டில் கட்டப்பட்டு வரும் சுகாதார வளாகம் 17வது வார்டு மக்களுக்கு என டெண்டர் விடப்பட்டுள்ளதாகவும், ஆனால் 18வது வார்டில் கட்டப்பட்டு வருவதாகவும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. 27.11.2013ல் டெண்டர் விடப்பட்டு 05.10.2017 வரை மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லை.

8. 3வது வார்டு திருவள்ளுவர் நகரில் கரும காரிய கொட்டகை கடடியபின்னர் மீண்டும் 3வது வார்டில் 2வது கரும காரிய கொட்டகை வாய்க்கால் கரையில் கட்டியுள்ளதாகவும் ஒரு வார்டிற்கு இரண்டு கரும காரிய கொட்டகை கட்டி தொகையினை விரயம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. 2வது வர்டு சாக்கடை கால்வாய் கட்டியதை பகுதி மக்கள் எதிர்ப்பால் இன்று வரை 300 மீட்டர் துாரம் மண்போட்டு மூடியுள்ளதாகவும், உதவிப் பொறியாளர் மேற்படி பணியினை நேரில் பார்த்து திட்டப்படி கட்டாதது பொறியாளர் செய்த தவறு எனவும், அனைத்து பணிகளுக்கும் உதவி இயக்குநரும் உதவிப் பொறியாளரும் ஒப்புதல் தந்துள்ளதாகவும் செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளதால் நடைபெற்ற தவறுகளுக்கு அவர்களையும் பொறுப்பாக்க வேண்டுமென தெரிவிததுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 21.11.2017ம் நாளிட்ட அறிப்பாணையில் மேற்கண்ட முறையீட்டு மனுதாரரின் 05.10.2015 ம் நாளிட்ட புகார் மனு, மேற்படி புகார் மனுவிற்கான புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 06.11.2017ம் நாளிட்ட விளக்க அறிக்கை, மற்றும் மேற்படி அறிக்கையின் மீதான முறையீட்டு மனுதாரரின் 05.10.2017ம் நாளிட்ட ஆட்சேபணைகள்/விளக்க அறிக்கை அடங்கிய நகலினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, உரிய தல ஆய்வு மேற்கொண்டும் ஆவணங்களை முழு ஆய்வு செய்தும் பிரத்யேக குறிப்புகளுடன் அறிக்கையினை சமர்ப்பிக்க தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 விதி 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 05.02.2018ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரரை தனது புகார் மனு மற்றும் ஆட்சேபணை/விளக்க அறிக்கை தொடர்பான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்யக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் 11.04.2018 அன்று ஆஜராக ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது கடித ந.க.எண். 3496/2017/பேரூ.1/நாள் 18.01.2018ல் மேற்படி புகார் மனுவிற்கான தல ஆய்வு மற்றும் விசாரணை அறிக்கை 27.02.2018 அன்று இம்முறைுமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றுள்ளது. அதில் கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் திரு உ. உதயகுமார் என்பவர் தெரிவித்துள்ள புகார்கள் தொடர்பாக 09.01.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்படுவதை முன்னிட்டு முறையீட்டு மனுதாரர், செயல் அலுவலர் மற்றும் தொடர்புடைய பொறியியல் அலுவலர்களை ஆஜராக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ந.க.எண். 3496/2017/பேரு.1/நாள். 03.01.2018ன் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், அதன்படி புவனகிரி பேரூராட்சியில் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் மேற்படி புகார் மனு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி விசாரணயில் முறையீட்டு மனுதாரர் திரு உ. உதயகுமார், உதவிப் பொறியாளர், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பணி மேற்பார்வையாளர் ஆகியோர் கலந்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரார்ர தனது புகார் மனுமிவல் தெரிவித்துள்ள 9 புகார்களுக்கான பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்கணும் விவரங்களை உறுதி செய்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

1. ஒவ்வொரு பக்க கால்வாய்களுக்கும் கருத்துரு தயார் செய்வதற்கு முன்பு இடத்தினை பார்வையிட்டு கால்வாய் தரத்தினை உறுதி செய்த பின்னர் கால்வாயின் வடிகால் நிலை அறிந்து மதிப்பீடு தயார் செய்வதாகவும் அதன்பின்னர் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. புவனகிரி பேரூராட்சிக்கு பேருந்து நிலையம் பழுது நீக்கம் பணி என்பதால் பல்வேறு பணிகளை உள்ளடக்கியது எனவும், ஒவ்வொரு பணிகளும் மதிப்பீடுகள் தயார் செய்து மொத்த மதிப்பீடு தொகை ரூ. 5.00 லட்சத்தில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு.பி.குமரவேல் என்பவருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும், திரு தங்க. மகாலிங்கம் என்பவர் பேருந்து நிலைய பழுது நீக்க பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. தாமரைக்குளம் படித்துறை கட்டும் பணி 2013–14ம் ஆண்டில் குளங்களை தூர் வாருவதற்கு 11.09.2013ல் பொது நிதியில் மேற்காள்ள ஒப்பந்த புள்ளி கோரப்பட்டதாகவும், குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்த ஒப்பந்தக்காரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாமரைக்குளத்தில் தொடர்ந்து நீர் குறையாமல் இருந்த காரணத்தினால் பணி மேற்கொள்ள இயலாத நிலை இருந்து வந்ததாகவும் இதன் அடிப்படையில் 2016ம் ஆண்டு ஒப்பந்தக்காரர் கோடைக்காலமான மே, ஜுன், மாதங்களில் படித்துறை பணி செய்ய முற்படும்போது ஊர் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் பேரூராட்சி மூலம் பணியினை மேற்கொள்வது தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் இதில் திட்டமிட்டு எந்த செயலும் செய்யவில்லை எனவும் முழுக்க முழுக்க பொதுமக்கள் நலன் கருதியே மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
4. மீனவர் தெருவில் சாலை பழுதடைந்துள்ள நிலையில் புதிய சிமெண்ட் சாலை அமைத்துக் கொள்ள பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு சிமெண்ட் சாலை பணி உரிய தரத்துடன் முடிக்கப்பட்டு தற்போது பொதுமக்களுக்கு பெரிதும் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
5. புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட 18வது வார்டில் அடிப்படை கட்டமைப்பு வசதி திட்டத்தின் கீழ் 2011–12ம் ஆண்டில் 21.10.2011 அன்று பேரூராட்சிகளின் இயக்குநரிடமிருந்து வரப்பெற்ற நிர்வாக அனுமதியின் கீழ் 27.10.2011ல் உதவி செயற்பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு ஆடு அடிக்கும் கூடம் 31.01.2011 அன்று இணைய தள இரு உறை (Two cover system) ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு உரிய விதிமுறைகளின்படி கட்டுமான பணி நடைபெற்று முடிவுற்றதாகவும், மேலும் மேற்படி பணியினை 30.12.2013 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்களால் காணோலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. 17வது வார்டில் திறந்தவெளியில் மலம் கழித்தலை தடுக்கும் திட்டத்தின் கீழ் 2013–14 ஆண்டில் பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண். 4846/2013/உ.4/நாள் 21.10.2013ன்படி உதவி செயற்பொறியாளரால் மதிப்பீட்டிற்கான தொழில் நுட்ப அனுமதி 322/04.11.2013ல் வழங்கப்பட்டு பேரூராட்சியின் மூலம் 27.11.2013 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை, குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திரு.எஸ்.பழனிச்சாமி என்பவருக்கு வழங்கப்பட்டு பணி தற்போது முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட பொது சுகாதார வளாகம் வார்டு 17 மற்றும் 18வது வார்டு மக்களுக்கு பெரிதும் பயன்படும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. வார்டு எண்.3, திருவள்ளுவர் நகரில் கட்டப்பட்டுள்ள கரும காரிய கொட்டகை வள்ளுவர் இன பொதுமக்களின் கோரிக்கையின் பேரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2013–14ம் ஆண்டில் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு, பணியின் ஒவ்வொரு நிலையிலும் பொறியாளர் மூலம் அளவீடு செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கரும காரிய கொட்டகை அப்பகுதி மக்களுக்கு பெரிதும் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வார்டு எண்.3 முள்ளிப்பள்ளம் காலனியில் கட்டப்பட்டுள்ள கரும காரிய கொட்டகை ஆதி திராவிட இன பொதுமக்களின் கோரிக்கையின்பேரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2015–16ம் ஆண்டில் ரூ. 3.50 லட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பொறியாளர் மூலம் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும் இக்கரும காரிய கொட்டகை அப்பகுதி மக்களுக்கு பெரிதும் பயன்பாட்டில் உள்ளதாக அபபகுதி மக்கள் செயல் அலுவலருக்கு கடிதம் தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் திருவள்ளுவர் நகரில் அமைந்துள்ள கரும காரிய கொட்டகைக்கும், முள்ளிப்பள்ளம் காலனியில் அமைந்துள்ள கரும காரிய கொட்டகைக்கும் சுமார் 1 கிலோ மீட்டர் துாரம் உள்ளதாகவும், திருவள்ளுவர் நகரில் வாழும் மக்கள் வள்ளுவர் இனத்தவர் எனவும், முள்ளிப்பள்ளம் பகுதியில் வாழும் மக்கள் ஆதி திராவிடர் இனத்தவர் எனவும் ஒவ்வொரு பிரிவினருக்கும் இறுதி சடங்கில் பண்பாடு கலாச்சாரம் வெவ்வேறாக உள்ளதால் வெவ்வேறு கரும காரிய கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது எனவும் இதில் நிதி இழப்பு ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. புவனகிரி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 2–ல் பொது நிதி திட்டம் 2014–15ல் கிழக்கு யாதவர் தெருவில் ரூ 5.00 லட்சம் மதிப்பீட்டில் பக்க கால்வாய் பணி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி (லிங்கபைரவி நகர் வழியாக) தண்ணீர் வடியும் பொருட்டு பணி நடைபெற்று முடிவுற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தண்ணீர் வடியும் பகுதிக்கு, அருகில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள லிங்கம்பைரவி நகர்

பொதுமக்களால் இவ்விடத்திற்கு பேரூராட்சி மூலம் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் இவ்வழியாக பக்க கால்வாய் தண்ணீர் வழியக்கூடாது என்றும் கால்வாய் முகப்பினை மண் மூட்டை அடுக்கி தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்து மேற்கண்ட பணியானது வடக்கு தெற்காக மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கால்வாயின் உயரத்தை அதிகப்படுத்தும் பொருட்டு உட்பகுதியில் மணலுடன் கூடிய கான்கிரீட் மட்டம் சரிபார்க்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது எனவும் தற்போது நல்ல தரத்துடன் பொதுமக்களுக்கு பெரிதும் பயன்பாட்டில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

9. பேரூராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக கடைகள் கட்டியும், வியாபாரம் செய்தும் ஆக்ரமணம் தனிநபர்களால் செய்யப்பட்டிருந்ததால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டதாகவும், அதனால் பேரூராட்சி தீர்மானத்தின் அடிப்படையில் பொது நிதி 2012–13ன் கீழ் மேற்படி கடைகள் கற்றப்பட்ட பின்னர் பேரூராட்சி மூலம் கடைகள் கட்டப்பட்டதாகவும், கட்டிடத்தின் மேல் பகுதியில் செல்லும் உயர் மின்னழுத்த பாதையினை மாற்றி புதிய மின் இணைப்புகள் வழங்க பேரூராட்சி மூலம் உரிய கட்டம் செலுத்தப்பட்டுள்ளதென பேரூராட்சி செயல் அலுவலர் ந.க.எண்.அ.1/378/2015/நாள். 09.01.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடலூர் மண்டலம், கடலூர் மாவட்டம், புவனகிரியை சார்ந்த திரு.உ.உதயகுமார், என்பவர் தமிழ்நாடு முறைமன்ற நடுவத்தில் அளிக்கப்பட்டுள்ள புகார் குறித்து 09.01.2018 அன்று புவனகிரி பேரூராட்சியில் மனுதாரர் திரு உ. உதயகுமார், பேரூராட்சி செயல் அலுவலர், உதவிப் பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் ஆகியோரிடம் விசாரணை மற்றும் கள ஆய்வு மேற்கொண்டதாகவும், கள ஆய்வின் அடிப்படையில் தற்போது பணிகள் யாவும் நல்ல முறையில் உள்ளதாகவும் இதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மண்டலம் தனது அறிக்கையில் விசாரணை மேற்கொண்டதற்கான விவரங்களுடன் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 05.02.2018ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனு குறித்த விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 11.04.2018ல் ஆஜராகவில்லை.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மீதான முறையீட்டு மனுதாரரின் விளக்க/ஆட்சேபணை அறிக்கை மற்றும் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது 09.10.2015ம் நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கான 06.11.2015ம் நாளிட்ட விளக்க அறிக்கை செயல் அலுவலரிடமிருந்து பெறப்பட்டு அதன் நகல் முறையீட்டு மனுதாரரின் விளக்கம்/ஆட்சேபணைகளை தெரிவிக்க இம்முறைமன்ற நடுவ ஆணை எண் 230/17 நாள் 14.09.2017 ன் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் 05.10.2017ம் நாளிட்ட விளக்க/ஆட்சேபணை அறிக்கையின் மீதான கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 09.01.2018ம் நாளிட்ட புவனகிரி

பேரூராட்சியில் நடைபெற்ற விசாரணையில் முறையீட்டு மனுதாரரும் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தல ஆய்வு அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகார்களுக்கான விவரங்கள் அனைத்தும் ஆய்வு மேற்கொண்டதாகவும் பணிகள் யாவும் முறையாக நடைபெற்று பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளதாகவும் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை எனவும் கடலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்தள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் தனது புகார் சம்பந்தமாக தனது விளக்கத்தை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக கோரி அழைப்பாணை அனுப்பியும் ஆஜராகவில்லை. எனினும் முறையீட்டு மனுதாரரின் புகார் குறித்த பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் விசாரணையில் கலந்து கொண்டதையும் முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனு தொடர்பாக தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகாத நிலையில் தனது மனு குறித்து விளக்கம் அளிக்க மனுதாரருக்கு ஏதும் இல்லை எனக் கருதி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் தல ஆய்வு அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுதாரரின் மனுவின் மீதான நடவடிக்கை கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு மே, 18 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

**செயலாளர்**

பெறுநர்.

1.திரு. உ. உதயகுமார்,
முள்ளிப்பள்ளம்,
புவனகிரி,
கடலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை,
கடலூர்.